செ.வெ.எண்.25 நாள்: 15.05.2020

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள வெளி மாநில தொழிலாளர்களை ரயில் மூலம் அனுப்பி வைத்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தூத்துக்குடி ரயில் நிலையத்தில் ஆய்வு செய்தார்.

---

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள வெளி மாநில தொழிலாளர்களை ரயில் மூலம் அனுப்பி வைத்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தூத்துக்குடி ரயில் நிலையத்தில் இன்று (15.05.2020) ஆய்வு செய்தார். ஆய்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் பால கோபாலன், இ.கா.ப., மாநகராட்சி ஆணையர் திரு.ஜெயசீலன், இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.விஷ்ணுசந்திரன், இ.ஆ.ப., தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., மற்றும் ரயில்வே அலுவலர்கள் உடன் இருந்தனர். வெளிமாநில தொழிலாளர்களை அழைத்து வர பேருந்துகள் ஏற்பாடு செய்தல், அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு உணவுகள் வழங்கி ரயில் மூலம் அனுப்பி வைத்தல் தொடர்பாக அலுவலர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் நேற்றுவரை 38 நபர்களுக்கு கொரோனா தொற்று நோய் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே 27 நபர்கள் கொரோனா தொற்று நோய் உறுதி செய்யப்பட்டு ஒருவர் உயிரிழந்து மற்றவர்கள் குணம் அடைந்த நீண்ட இடைவெளியில் 18 நாட்களுக்கு பின்னர் புதிதாக 11 நபர்கள் கொரோனா தொற்று நோய் உறுதி செய்யப்பட்டது. இதில் 4 நபர்ககள் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்தும், 7 நபர்கள் சென்னை மாவட்டத்தில் இருந்து வந்தவர்கள் ஆவர். இதில் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து தூத்துக்குடிக்கு உறவினர் வீட்டுக்கு வந்த ஒரு நபர் இன்று அதிகாலை தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உயிரிழந்தார். அவரது உடல் சுகாதாரத்துறை மற்றும் உள்ளாட்சித்துறை அலுவலர்களால் உரிய விதிமுறைகளை பின்பற்றி அடக்கம் செய்யப்பட்டது. நமது மாவட்ட எல்லை பகுதிகளில் 15 சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு வருவாய்த்துறை, சுகாதாரத்துறை மற்றும் காவல் துறை அலுவலர்கள் மூலம் வெளி மாநிலம் மற்றும் வெளி மாவட்டத்தில் இருந்து வரும் நபர்கள் அனைவரும் கொரோனா தொற்று பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றனர். இதில் வெளி மாநிலங்களில் இருந்து வரும் நபர்கள் தனிமைப்படுத்துவதற்காக 6 தனிமைப்படுத்தும் முகாம்கள் 700 படுக்கை வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு தனிமைப்படுத்தப்படுபவர்கள் 14 நாட்களுக்கு பின்னர் கொரோனா தொற்று இல்லை என்ற அறிக்கை வந்தபின்பு தான் அவர்களது வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

வெளி மாநில தொழிலாளர்கள் குறிப்பாக பீகார் மாநில தொழிலாளர்கள் அவர்களது சொந்த ஊருக்கு செல்வதற்காக திருநெல்வேலியில் இருந்து நாளை மதியம் சிறப்பு ரயில் புறப்படுகிறது. இதில் நமது மாவட்டத்தில் இருந்து சுமார் 1000 நபர்கள் மற்றும் திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களை சேர்ந்த சுமார் 464 நபர்கள் என மொத்தம் 1,464 நபர்கள் செல்கின்றனர். இவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள், உணவு வசதிகள் என அனைத்து ஏற்பாடுகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது. இதுவரை நமது மாவட்டத்தில் இருந்து பீகார் மாநிலத்தை சேர்ந்த 233 நபர்கள், ஜார்கண்ட் மாநிலத்தை சேர்ந்த 148 நபர்கள் சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நமது மாவட்டத்தில் 8,780 வெளிமாநில தொழிலாளர்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருகின்றனர். இதில் 4000க்கும் மேற்பட்ட நபர்கள் சொந்த மாநிலத்திற்கு செல்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். அவர்களும் சொந்த மாநிலத்திற்கு செல்வதற்கு ரயில் வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.உமாசங்கர், வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) திரு.செல்வபிரசாத், தூத்துக்குடி ரயில் நிலைய மேலாளர் திரு.சுனில்ராம், ரயில் நிலைய முதுநிலை வணிக ஆய்வாளர் திரு.ஜெயசந்திரன் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி